## திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) செயல்முறைகள்

### ஆணையிடுபவர்: திரு.இரா.வில்சன் இராசசேகர்.B.A,

ந.க.அ3/3374/2020 நாள்:08.11.2021.

பொருள்: கருணை அடிப்படையில் பணிநியமனம் - திருப்பத்தூர் மாவட்டம் - முன்னாள் படைவீரர் நலத்துறை – ராஜேந்திரன் (லேட்).P Havildhar – படைப்பணி - 17-07-2012 அன்று காலமானது - வாரிசுதாரர் - பிரித்திவிராஜ் (திரு) .ரா - கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளர் - பணி நியமனம் செய்து - ஆணையிடப்படுகிறது.

படிக்க:
1. கூடுதல் இயக்குநர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.14789-4/2020/வே1 நாள்: 03.12.2020
2. வேலூர், உதவி இயக்குநர், அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் அவர்களின் கல்விச்சான்று மெய்த்தன்மை அறிக்கை
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை நாள்: 23.01.2020.
4. திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ3/3374/2020, நாள்:08.11.2021.

*******

ஆணை:

இந்திய ராணுவத்தில் Havildhar – ஆக பணிபுரியும்போது பணியிடையே 17.07.2012 அன்று காலமான லேட்.C.ராஜேந்திரன் என்பவரின் மகன் திரு.ரா.பிரித்திவீராஜ் என்பவருக்கு கருணை அடிப்படையில் திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகில் பின்வருமாறு தற்காலிகமாக பணிநியமனம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணிநாடுநர் பெயர் மற்றும் முகவரி | பணிநியமனம் செய்யப்படும் அலுவலகம் |
|---|---|---|
| 1. | திரு.ரா.பிரித்திவிராஜ் த/பெ.ராஜேந்திரன்<br>ப.எண்.61/1, பு.எண்.10,<br>அண்ணாதெரு, சடலகுட்டை கிராமம்,<br>நாட்றம்பள்ளி வட்டம்<br>திருப்பத்தூர் மாவட்டம். 635852 | நாட்றம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக திரு.எம்.சிதம்பரம் என்பவருக்கு பதிலாக நியமிக்கப்படுகிறார். |

ii) மேற்படி நபருக்கு கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு இப்பணிநியமனம் வழங்கப்படுகிறது.

1. இந்நியமனம் தொடர்பாக நீதிப்பேராணை மனுக்கள் சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற மதுரை கிளை ஆகியவற்றில் நிலுவையில் உள்ள வழக்குகளின் இறுதி உத்தரவிற்குட்பட்டு இந்நியமனம் முற்றிலும் தற்காலிகமானது.
2. இந்நியமனம் தொடர்பாக தனியர் அளித்த உறுதிமொழி மற்றும் அசல் ஆவணங்களில் தவறான தகவல்கள் ஏதும் அளித்துள்ளதாக பின்னர் அறியவரின் இத்தற்காலிக நியமனம் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

3. இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒருவார காலத்திற்குள் நியமனம் செய்யப்பட்டுள்ள பணியிடத்தில் பணியில் சேர அறிவுறுத்தப்படுகிறார். தனியர் பணியில் சேராவிடில், இவ்வாணை உடன் ரத்து செய்யப்படும்.
4. இப்பணிநியமன உத்தரவு தொடர்பாக எவ்வித முறையீடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. நியமனம் செய்யப்பட்ட பணியிடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால அவகாசத்திற்குள் பணியில் சேர வேண்டும். இதற்கான கால அவகாசம் ஏதும் நீட்டிக்கப்படமாட்டாது.
5. தனியர் பணியில் சேரும்போது, நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில், உரிய மருத்துவரிடமிருந்து பெறப்பட்ட உடற்தகுதி சான்றினை பெற்று அசலாக சமர்பிக்க வேண்டும். மாற்றுத்திறனாளியாக இருப்பின் மாவட்ட மருத்துவ குழு முன்பு ஆஜராகி உரிய சான்று பெற்று சமர்பிக்க வேண்டும்.
6. மேற்படி நபர் அவருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள பணியிடத்தில் பணியில் சேரும் முன்பு அவருடைய வேலைவாய்ப்பு பதிவு அட்டையினை அசலாக சம்மந்தப்பட்ட அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.
7. அரசளவில் தனியரின் கருணை அடிப்படையிலான பணியை உறுதி செய்து ஆணைகள் வரப்பெற்ற பின்னரே இவரது பணி வரன்முறை செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**iii)** மேற்படி நபர் பணியில் சேர்ந்த விவரத்தினை தெரிவிக்குமாறு சம்மந்தப்பட்ட அலுவலர் கோரப்படுகிறார்.

08/11/2021

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது)
திருப்பத்தூர்.

பெறுநர்
சம்மந்தப்பட்ட நபர்.

08/11/2021

நகல்: சார் ஆட்சியர், திருப்பத்தூர்.
நகல்: வட்டாட்சியர், நாட்றம்பள்ளி.
நகல்: மாவட்ட ஆட்சியரின் முகாம் உதவியாளர்.
நகல்: மாவட்ட வருவாய் அலுவலரின் முகாம் எழுத்தர்.
நகல்: உதவி இயக்குநர், முன்னாள் படைவீரர் நலன், வேலூர்.
நகல்: அ3 இருக்கைக்கு.